(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 207.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2012 ஓகத்து 21, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1188/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கோதுமை மாவின் கடந்த 5 வருடங்களுக்கான,

(i) மொத்த நுகர்வையும் அதன் தலாவீத நுகர்வையும்;

(ii) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தொகையையும்;

(iii) இலங்கையில் கிலோ ஒன்றுக்கான உற்பத்திச் செலவையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட தொகையையும்;

(v) இறக்குமதி செய்யப்பட்ட தொகையின் பெறுமதியையும்

வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் ஒரு கிலோ கோதுமை மா மீது விதிக்கப்படும் எல்லா வரிகளையும் (நேரடி மற்றும் மறைமுக) தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1642/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி மாவட்டத்தின் எல்பிட்டிய வலயக் கல்விக் காரியாலயத்துக்குரிய கா/அகுலுகல்லை கனிஷ்ட பாடசாலை மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அதனால், அப்பாடசாலைக்குச் சொந்தமான பாரியளவு பௌதீக வளங்கள் அழிவடைந்து வருகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலையை மீண்டும் திறக்காவிடின், அதனை வேறு பொருளாதார நடவடிக்கைகாக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில்,அப்பொருளாதார நடவடிக்கை யாது என்பதையும்;

(iii) அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1907/ '11

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய தொலைக்காட்சிக்குச் சொந்தமான, விளையாட்டுப் போட்டிகளை ஒளிப்பதிவு செய்துள்ள நாடாக்களை அல்லது இருவட்டுகளை கால்ரன் விளையாட்டு அலைவரிசைக்கு (CSN) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு வழங்குவதற்கான காரணங்கள் யாதென்பதையும்;

(iii) மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகள் வழங்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி நாடாக்களை பெற்றுக்கொள்வதற்காக கால்ரன் விளையாட்டு அலைவரிசை தேசிய தொலைக்காட்சிக்கு செலுத்திய பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கால்ரன் விளையாட்டு அலைவரிசையினால் மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகளை பெற்றுத் தரும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பின் மேற்படி வேண்டுகோளை விடுத்தவரின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வேண்டுகோள் கடிதம் யாதென்பதையும்;

(iii) தேசிய தொலைக்காட்சியினால் மேற்படி நாடாக்கள் அல்லது இருவட்டுகளை விடுவிப்பதற்கு அதிகாரம் வழங்கிய உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2109/ '11

4\.

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) கலதாரி ஹோட்டல் லங்கா பிஎல்சி, லாப்ஸ்கேஸ் (Laugh Gas) பிஎல்சி மற்றும் சிலோன் கிரைன் எலிவேடர்ஸ் (Ceylon Grain Elevators) ஆகியவற்றில் ஊழியர் சேமலாப நிதியம் கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) பங்குகளின் தொகுதி ஒவ்வொன்றும் கொள்வனவு செய்யப்பட்ட திகதிகளையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பங்குகள் கொள்வனவு செய்யப்பட்ட விலை யாதென்பதையும்;

(iv) பங்குகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்;

(v) பங்குகள் பின்னர் விற்பனை செய்யப்பட்டிருப்பின், விற்கப்பட்ட நபர்களின் பெயர்களை பங்குத் தொகுதி அடிப்படையிலும்;

(vi) மேற்குறிப்பிடப்பட்ட பங்குகளின் ஒவ்வொரு தொகுதியும் விற்கப்பட்ட விலையையும்;

(vii) இக்கொடுக்கல் வாங்கல்களில் சம்பந்தப்பட்ட தரகர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறியத்தருவாரா?

(ஆ) இன்றேல், என்?

2345/ '12

5\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் செயற்படுகின்ற சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் சம்பந்தமாக செயலாற்றுகின்ற அரசசார் நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனம் சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் சம்பந்தமாக மேற்கொள்கின்ற பணிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாவட்ட ரீதியாக தற்போது இயங்குகின்ற சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் பராமரிக்கப்படுகின்ற சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றில் கடமையாற்றுகின்ற நிர்வாகப் பொறுப்பாளர் மற்றும் உதவியாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2425/ '12

6\.

கௌரவ சுனில் ஹதுன்னெத்தி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி அனல் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து தேசிய மின்வலு முறைமையில் உண்மையிலேயே உள்வாங்கப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தில் மின் அலகொன்றை உற்பத்தி செய்ய நாளொன்றுக்கு ஏற்படும் செலவு யாது;

(iv) நுரைச்சோலை அனல் மின் நிலையம் திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் எத்தனை தடவைகள் செயலிழந்தன;

(v) இறுதியாக அது செயலிழந்த திகதி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி மின் உற்பத்தி நிலையத்துக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு விரயமாகியுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் தோல்விக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் இனம் காணப்பட்டுள்ளனரா;

(iii) ஆமெனில், இவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2781/ '12

7\.

கௌரவ அஜித் பி.பெரேரா,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012.05.01ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் மே தினக் கூட்டத்தின்போது புலிகள் அமைப்புக்கு உரிய கொடியொன்றை குறிப்பிட்ட ஒரு நபர் ஏந்தியிருக்கும் படத்தைக் கொண்ட ஒரு செய்தி சுயாதீன தொலைக்காட்சிச் சேவையில் ஒளிபரப்பப்பட்டதா;

(ii) சுயாதீன தொலைக்காட்சிச் சேவையைச் சார்ந்த ஒரு ஊடகவியலாளரினால் அல்லது ஒரு குழுவினால் குறிப்பிட்ட மே தின ஊர்வலம் ஒளிப்பதிவு செய்யப்பட்டதா;

(iii) இல்லையெனில், புலிகள் அமைப்புக்குரித்தான கொடியொன்றை ஏந்தியிருக்கும் படத்தைக் கொண்ட ஒளிநாடாவை சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய நபர் யார்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுயாதீன தொலைக்காட்சிச் சேவையினால்,

(i) மேற்குறிப்பிடப்பட்ட ஒளிநாடாவின் போலியற்றதன்மை அல்லது உண்மைத்தன்மை எவ்வாறு உறுதி செய்யப்பட்டது;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட காட்சிகளை உள்ளடக்கிய படம் எத்தனை தடவைகள் ஒளிபரப்புச் செய்யப்பட்டது;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட காட்சிகள் ஒளிபரப்புச் செய்யப்பட்ட திகதிகள் மற்றும் நேரங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1833/ '11

8\.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தமிழ் மொழிமூல அரச பாடசாலைகளில் கஷ்டப் பிரதேச சேவைக்காலத்தை பூர்த்தி செய்தபின்னர் இடமாற்றம் கிடைக்காததனால் பெரும் விரக்திக்கு உள்ளாகியுள்ள ஆசிரியர்கள் பெருமளவில் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இவ்வாறு விரக்திக்கு உள்ளாகியுள்ளமை இவ்வாசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டின் தரம் குறைவடைவதற்குக் காரணமாயமைந்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மாத்தறை மாவட்டத்தில் இடமாற்றம் கோரியுள்ள தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் உரிய தகைமைகளை பூர்த்திசெய்துள்ள ஆசரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், எத்தேதிகளில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1934/ '11

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010ஆம் ஆண்டு மற்றும் 2011ஆம் ஆண்டு முதல் இற்றை வரையிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு (CPC) ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டத்தை வெவ்வேறாகவும்;

(ii) இலாபம் அல்லது நட்டத்திற்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதியிலிருந்து இறுதியாக அவை உபயோகிக்கப்படும் வரையிலும் விதிக்கப்பட்ட சகல விதமான வரிகள் மற்றும் கட்டணங்களையும் உள்ளடக்கிய பின் ஏற்பட்ட மொத்த இலாபம் அல்லது நட்டம்; மற்றும்

(ii) பெற்றோலிய உற்பத்திகள் மீது வரிகளை சுமத்தி விற்பனை செய்வதன் மூலம் நியாயமற்ற வகையில் பாரிய இலாபத்தை ஏன் அரசாங்கம் ஈட்டியது என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இழப்புக் காப்பீட்டு (hedging) முறைகேட்டின் காரணமாக வெளிநாட்டு வங்கிகளுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் தற்போது செலுத்தவேண்டியுள்ள தொகையையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2123/ '11

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண உபகரணங்கள் கம்பனியில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணம் முதலீடு செய்யப்பட்ட ஆண்டுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளுக்காகப் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தை முதலீடு செய்வதற்கு தீர்மானித்தவர்கள் யாவர் என்பதையும்;

(v) இதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அதனுடன் தொடர்புடைய ஆவணங்களை சபா பீடத்தில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2348/ '12

11.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் விதந்துரைக்கப்பட்டுள்ளவாறு பகல்நேர சிறுவர் பாராமரிப்பு நிலையமொன்றில் பாதுகாப்புப் பெறக்கூடிய பிள்ளையொன்றின் உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வயதெல்லைகள் யாவையென்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் சிறுவர்களின் பாதுகாப்பு சம்பந்தமாகப் பதிவாகியுள்ள குற்றச்சாட்டுக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2427/ '12

12.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் பிரதான உணவகம் குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்திற்கு வைத்தியசாலையின் உணவகம் குத்தகைக்கு விடப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி நிறுவனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலை உணவகத்தினால் ஊழியர்களுக்கும் நோயாளிகளுக்கும் சலுகைக் கட்டணத்தில் உணவு, பானங்கள் வழங்கப்படுகின்றன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி நிறுவனத்தினால் கோதுமை மாவினாலான உணவு வகைகளுக்கு மேலதிகமாக வேறு உணவுகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) நீரிழிவு நோயாளிகளுக்காக மேற்படி உணவகத்தினால் வழங்கப்படும் கோதுமை மாவினால் அல்லாத உணவு வகைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி உணவகத்தினால் நீரிழிவு நோயாளிகளுக்கும் ஏனைய நோயாளிகளுக்கும் வழங்கப்படும் கோதுமை மாவினால் அல்லாத உணவு வகைகள் போதுமானதாக இல்லையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1834/ '11

13.

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன , மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள குறுவிட்ட பொலிஸ் நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தின் பணிகள் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் அது பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) நிர்மாணப் பணிகள் முடிவுற்றிருந்தும் இப்புதிய கட்டிடம் திறந்து வைக்கப்படாதுள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) புதிய கட்டிடத்தில் குறுவிட்ட பொலிஸ் நிலையத்தின் கடமைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1935/ ’11

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் யூலை மாதம் வரை தரக்குறைவான பெற்றோல் மற்றும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகளை இலங்கைக்கு விநியோகித்தவர் அல்லது விநியோகித்தவர்களையும்;

(ii) இந்த முறைகேட்டிலிருந்து அமைச்சு எவ்வாறு தவிர்க்கப்பட்டது என்பதையும்;

(iii) தரக்குறைவான பெற்றோல் உபயோகத்தால் பாதிப்புக்குள்ளான நுகர்வோரின் எண்ணிக்கையையும்;

(iv) தரக்குறைவான பெற்றோல் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொண்ட வாடிக்கையாளரின் பெயர்களையும்;

(v) பாதிப்படைந்த ஒவ்வொரு நுகர்வோருக்கும் வழங்கிய நட்டஈட்டை வெவ்வேறாகவும்;

(vi) தரம் குறைந்த பெற்றோல் காரணமாக இயந்திரங்கள் பழுதடைந்த எரிபொருள் நிலையங்களின் எண்ணிக்கையையும்;

(vii) அவ்வாறான எரிபொருள் நிலையங்களுக்கு எவ்வாறு நட்டஈடுகள் வழங்கப்படுகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) தரக்குறைவான பெற்றோல் சூழ்ச்சித் திட்டத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவந்த தரப்பினருக்கு கவர்ச்சிகரமான மிகையூதியமொன்று வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2124/ ’11

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெரிய பிரித்தானியாவினால் வழங்கப்பட்ட இரும்புப் பாலங்கள் கருத்திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதிலும் நிர்மாணிக்கப்பட்ட இரும்புப் பாலங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாலங்களை நிர்மாணிப்பதற்காக பிரித்தானியா வழங்கிய பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பாலத்தினதும் நீளம், அகலம், மதிப்பீட்டுத் தொகை மற்றும் நிர்மாணிப்புச் செலவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) ஒவ்வொரு பாலத்திற்காகவும் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை விட மேலதிகமாக செலவான தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை விட செலவு அதிகரித்தமைக்கான காரணங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் நிபந்தனைகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3), 14 மற்றும் 20 ஆம் பிரிவுகளின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2012 யூன் மாதம் 27 ஆம் திகதிய 1764/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான நிபந்தனைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

திவிநெகும சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 7.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 10.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

11.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

காசிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

2203/ ’11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்படாத, கடந்த 10 வருடங்களுள் நிறுவப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான சகல கம்பனிகளையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனிகள் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் திணைக்களத்தினால் கண்காணிக்கப்படுகின்றனவா என்பதையும்; மேலும்

(iii) இன்றேல், நிதி திட்டமிடல் அமைச்சில் யாரால் அது மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேலே (அ) - (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனிகள் தொடர்பில், கடந்த 10 வருட காலப்பிரிவில்,

(i) அறவீடு விதிக்கப்பட்ட அல்லது அரசாங்கம் பங்கிலாபங்களைப் பெற்றுக் கொண்ட தாபனங்களின் எண்ணிக்கையினையும்;

(ii) எந்த விதமான நிதியினையும் மீளப்பெறமால் அரசாங்கத்தினால் கொடுப்பனவு செலுத்தப்பட்டு வரும் தாபனங்களின் எண்ணிக்கையினையும்;

(iii) ஒவ்வொரு தாபனத்திற்கும் அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட தொகையினை வெவ்வேறாகவும்;

(iv) இந்த தாபனங்கள் ஒவ்வொரு வருடத்திற்கும் தேறிய இலாபத்தினையா அல்லது நட்டத்தினையா அடைந்துள்ளன என்பதையும்;

(v) ஒவ்வொரு தாபனத்திலுமுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையினையும்;

(vi) ஒவ்வொரு தாபனத்திலும் அரசாங்கம் முதலீடு செய்துள்ள மொத்த மூலதனத்தினையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2302/ '12

2.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கல்வி அமைச்சின் கீழ் வழங்கப்பட்ட நியமனங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பதவிப் பெயர் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் தனித்தனியே யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இறுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் சம்பளத் திருத்தத்திற்கு ஏற்ப ஆசிரியர் சேவையின் ஒவ்வொரு தரத்தீற்கும் உரித்தாகும் அடிப்படை மாதாந்தச் சம்பளம் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) அரசாங்க ஆசிரியர்களுக்கு கிடைக்கும் மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக உரித்தாகும் சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் ஆசிரியர் சேவையின் ஒவ்வொரு தரத்திற்கு ஏற்ப தனித்தனியே யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2303/ '12

3.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1990ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் டெங்கு நோய் தொற்று, வாகன விபத்துகள், தற்கொலை, உணவு நஞ்சாகுதல், உடல் அல்லது உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகுதல் ஆகிய காரணங்களால் வருடாந்தம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட அல்லது மரணமடைந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையும், அவர்கள் கல்வி பயின்ற பாடசாலைகளும் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) கடந்த வருடத்தில் பல்வேறு தவறுகளுக்காக குற்றஞ்சுமத்தப்பட்டு சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை, பிள்ளையின் வயதெல்லை மற்றும் பாடசாலைக்கு ஏற்ப தனித்தனியே யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2461/ '12

4.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அட்டாளைச்சேனை 14, கொமன் வீதி, 4/5 ஆம் இலக்க இடத்தில் வசிக்கின்ற திரு எம்.ஏ. அபாஜுல்பான், இலங்கை ஆசிரியர் கல்விச் சேவையின் III ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு 2006.06.01 ஆம் திகதி தோற்றியுள்ளார் என்பதையும்;

(ii) சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள போதிலும் மேற்படி பதவிக்கு நியமிப்பதற்கு பகிரங்க சேவைகள் ஆணைக்குழு இதுவரை அவரின் பெயரை சிபார்சு செய்யவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி விடயம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள (HRC/2775/09) ஆம் சிபார்சை அமுல்படுத்தி (17/2005 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய) இவருக்கு உரித்தாக வேண்டிய பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான கல்வி அமைச்சின் சிபார்சை, பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2462/ '12

5.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அக்குரணை, தொடம்கொல்லை, 233/1 ஆம் இலக்க முகவரியில் வசிக்கின்ற, திரு. குருகொட முஹந்திரம்லாகெதர நூர் முஹம்மத் செய்யத் முஹம்மத், நுவரெலியா மாநகர சபைக்கு உரித்தான "கார்கில்ஸ் திடல்" வர்த்தக கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள ஒரு கடை அறையை குத்தகைக்கு பெற்றுக் கொள்வதற்காக 1993.01.04 ஆம் திகதி ரூபா ஒரு இலட்சம் பணத் தொகையையும், 2002.09.25 ஆம் திகதி ரூபா தொண்ணூராயிரம் பணத் தொகையையும் வைப்புச் செய்துள்ள போதிலும் இதுவரை அவருக்கு கடை அறை வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு அமைய திரு. செய்யத் முஹம்மதுக்கு, மேற்படி கடை அறை உரித்தாக வேண்டுமென வழங்கப்பட்டுள்ள சிபார்சை (HRC/K/429/06/11) குறித்த உள்ளூராட்சி மன்றம் அமுல்படுத்தத் தவறியுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சிபார்சை அமுல்படுத்தத் தவறியுள்ளதுடன், 17/2005 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையை மீறிவருகின்ற நுவரெலியா மாநகர சபையின் பொறுப்புக்கூற வேண்டியர்களுக்கு எதிராக பக்கச்சார்பற்றதொரு விசாரணையை நடாத்துவதற்கும், திரு. செய்யத் முஹம்மதுக்கு நியாயத்தை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?